Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# சங்ககால இலக்கியம்

42

**செல்வி.தியாகராஜா அட்சனா**
**மகாராஜா சாயாஜிராவ் பல்கலைக்கழகம் - பரோடா**
**ஈ.மெயில் – adcharran@gmail.com**

**ஆய்வுச் சுருக்கம்:-**

பல இலக்கியங்கள் பல புலவர்கள் முதன்மைக்காலமான சங்க காலத்தில் தோன்றி தமிழ் எனும் மொழிப் படைப்பை வளர்த்து ஏனைய காலங்களிலும் தமிழ்மொழி தடம் பதிப்பததிற்கு சங்க காலம் உறுதுணையாக இருந்தது எனலாம். இவ்வாறு சங்க காலத்தில் காதல்; வீரம், மன்னனது சிறப்பு, கொடை, வள்ளல், புலவர்களது கவி ஆற்றல் தமிழ்த் திறமை, அறிவுரைப்பாங்கு என்பன எழுந்த ஓர் பொற் காலம் சங்க காலம் என்றால் அது மிகையாகாது. இதனை அடியொட்டியே ஏனைய காலங்களும் தோன்றின எனலாம். இது பல அறிஞ்ஞர்கள் இப்பொழுதும் எப்பொழுதும் ஏன் வருங்காலத்திலும் தோன்ற எடுகாட்டியாக உள்ளது எனலாம்.இதனால் தமிழ் தீன்தோன்றா அரிய பொக்கிசமாக வளர்க்கப்படும்.

**திறவுச்சொற்கள்:-**

வெறியாடல், மடலேறுதல், வரைபாயுதல், கொல்லேறு தழுவுதல், விடலை, ஊடல், கூடல்

**சங்ககாலத் தோற்றம்**

கால விழிவரம்பில் இயற்கைக் கொடையாக ஆதாம் ஏவாளின் மொழியில்லாப் பயணத்தில் மௌனங்கள் வாசலாக அமைய மெதுவாக ஒலிகள், சத்தங்கள், சைகைகள் பிறக்க மொழி எனும் வாசல் கதவு திறக்கப்பட்டது. மொழிகளுக்கெல்லாம் மூத்த மொழியாம் தமிழ் மொழி என பல அறிஞர்கள் விளக்கப்படம் வரைந்துள்ளனர், வரைந்த அந்த விளக்கம் தற்பொழுது பரந்து விரிந்த விருட்சமாக, தமிழ் மொழியாம் செம்மொழி என வளர்ந்துள்ளது என்றால் அது மிகையாகாது. இதற்கு அக்காலத்திலும் இக்காலத்திலும் தீந்தமிழ் கமழும் வகையில் தமிழ் மொழியை பரப்பிக்கொண்டிருக்கும் தமிழறிஞர்களே காரணம். அந்தவகையில் முத்தமிழ் வளர்த்த காலம் மூவேந்தர் காலம் யாவரும் அறிந்ததே! வட வேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகு என வடக்கே வேங்கட மலையும், தெற்கே குமரி முனையையும் எல்லையாக கொண்டு

பரந்து விரிந்த தமிழ் நிலத்தை மூவேந்தர் மன்னர்களாகிய சேர சோழ பாண்டியர் ஆட்சி

புரிந்தகாலம் ஆகும். இவர்கள் தலைச்சங்கம், இடைச்சங்கம் கடைச்சங்கம் என மூன்று சங்கங்களை

அமைத்து தமிழை வளர்த்த காலம் என்றால் அது சங்க காலமே1. கிறிஸ்துவுக்குப் பின் முதலாம், இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டுக்குரிய காலமாகும். சங்க காலம் மூவேந்தர் காலம், இயற்கை நெறிக்காலம,; வீரயுக காலம் எனவும் அழைக்கப்பட்டது. சங்க காலத்தில் மக்கள் இயற்கையோடு ஒன்றித்து தங்களது வாழ்க்கையை நடத்தினர் மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி எனவும,; காடும் காடு சார்ந்த இடமும் முல்லை எனவும், வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் எனவும், கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனவும், மணல் பாங்கான பிரதேசம் பாலை நிலம் எனவும் தங்கள் வாழ்விடங்களை சங்ககால மக்கள் அமைத்துக் கொண்டனர். மேலும் அக்கால மக்களின் வாழ்வியல் சமூக நிலை, சமய நிலை, சம்பிரதாங்கள் மற்றும் கல்வி நிலை என்பன இயற்கையோடு

ஒன்றித்தே காணப்பட்டது.2

**குறிஞ்சி நிலம் :-**

அந்த வகையில் குறிஞ்சி நிலம் மலையும் மலை சார்ந்த இடமாகும். குறிஞ்சி நில மக்களின் பிரதான தொழிலாக தினை விதைத்தலும் வேட்டையாடுதலமாக இருந்தது. வேட்டையாடுதல் தொழிலை பிரதானமாக ஆண்கள் மேற்கொண்டனர். இருப்பினும் தினை விதைப்பதற்காக ஆண் பெண் இருவருமே சென்றனர்.அந்;த பயிர் சற்று வளர்ந்ததும் அதனை பறவைகளிடமிருந்தும் விலங்குகளிடம் இருந்தும் பாதுகாப்பதற்றுவதற்காக ஆண் பெண் இருவரும் காவலுக்கு செல்வர். இவ்வாறு இவர்களது சாதாரண வாழ்க்கையில் வாழ்வியல் நகர்ந்து கொண்டிருக்கும் வேளையில் எதிர்த் தினை புனைத்தையோ அல்லது அருகாமையில் உள்ள தினை புணச்சோலையையோ பாதுகாக்க வந்திருக்கும் ஆண்களைக் கண்டு அவர்கள் அழகில்இ திறமையில்இ பேச்சாற்றலில் வியந்து தங்களது மனங்களை பறி கொடுப்பர். அதேபோன்று ஆண்களும் பெண்களது அழகையும் அவர்களது எழில் நயத்தையும் கொஞ்சும் பேச்சழகையும் கண்டு மயங்கி தங்களது ஆண்மையே தோற்கும் வண்ணம் காதலில் விழுவர். இவ்வாறு ஆண் பெண் இருவரும் இவர்களது காதல் பயிரை வளர்ப்பதற்கு தினை புறம் ஓர் உகந்த இடமாக காணப்பட்டது எனலாம். இருப்பினும் தங்களது காதலை நேரடியாக ஆண் பெண் இருவரும் பகிர்ந்து கொள்ள மாட்டார்கள். காரணம் பெண்கள் செவிலி தாயின் வளர்ப்பில் இருப்பதனால் அவர்களுக்கு இயவாகவே நடந்து கொள்வர்.ஆகையினால் தங்களது காதல் வயப்பட்ட மனநிலையை ஆண்களிடம் சொல்லத் தயங்குவர்.இருப்பினும் தங்களது காதல் மனநிலையை எண்ணி ஏங்கிக் கொள்வார்கள். தங்களது காதலை வளர்ப்பதற்காக மறைமுகமாக அங்குள்ள பறவைகளையும் அங்கு வரும் தோழிகளையும் தங்களது தூதுக்காகவும் செய்திகளை ஆண் பெண் காதிற்கு எடுத்துச் செல்லும் ஓர் ஊடகமாகவும் பயன்படுத்திக் கொண்டனர;. இந்த அழகிய காதல் வலயத்தின் சிறப்பம்சம் பற்றி கூற வந்த புலவர.;3

“ஒத்த அன்பினரான தலைவனும் தலைவியும் தம்முள் தாம்; எதிர்ப்பட்டு

கூடுகின்ற கூட்டத்தில் பிறந்து இக்காதல் இத்தன்மை ஆனது இவ்வாறானது என்று

பிறரிடம் கூற முடியாது தமக்குள்தாம் இன்புற்றுக்கொள்ளும் அழகிய காதலே

சங்ககாலத்தில் குறிஞ்சி நில அகக் காதல் என சிறப்பாக வரையறுத்துள்ளனர்.”

சங்க காலத்தில் இவ்வாறு சமூக நிலை காணப்பட்டாலும் மக்களது சாதாரண வாழ்விலும் அகம் இவ்வாறு மேன்மை பெற்றது என்பதனை இதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.; அதேபோன்று சங்க கால மக்களின் சமய நிலையும் மிக உன்னதமாக காணப்பட்டது என்றே குறிப்பிடலாம். இச்சமய நிலைமையிலும் அழகிய காதல் வயப்பட்ட மனநிலை எடுத்து இயம்பப்பட்டுள்ளது. அழகு தெய்வமாம்இ சென்நிறமானவனும் மயில் மீது ஏறி காட்சியளிப்பவனும் ஆகிய முருகப் பெருமானே தங்களது ஆதாரக் கடவுளாக குறிஞ்சி நில மக்கள் வழிபட்டனர். முருகன் சன்னிதானத்தில் வேலன் வெறியாடல் இடம் பெறும். வெறியாடல் என்பது வழிபடும் போது பெண்களுக்கு ஏற்படும் மருள.; (அதாவது ஒரு வகை வெறியைக் குறிக்கிறது) கடவுளின் செல்வாக்கு ஆடப்பட்டு பெண்கள் பாடி ஆடுவர். அப்பொழுது குறிஞ்சி நில மக்கள் தங்களது எதிர்காலத்தை குறித்து முன்னறிவிப்பர். நோய்களையும் குணப்படுத்திக் கொள்வர். மற்றைய புறம் தலைவியை துய்த்த தலைவன் தலைவியிடம் வராமல் ஒரு வழித்துணைந்து நிற்பதுமஇ; தலைவி தலைவனை எண்ணி உடல் இளைப்பதுமஇ; இந்த இழப்புக்கான காரணத்தை அவளது தாய் வேலனையும் குறி சொல்லும் முதுவாய் பெண்களை கேட்டு அறிவதுமஇ; அவர்கள் முருகனை வணங்கிக் கொண்டனர் என்பதும்இ விளையாட்டு அயர முருகன் சினம் தணிந்து மகள் நலம் பெறுவாள் என்பதும்இ தாய் மகளுக்கு வெறியாட்ட விழா நடத்துவதும்இ சங்க காலத்தின் சிறப்பம்சம் ஆகும். இதனை முருகயர்தல் என்றும் கூறுவர்.4

**முல்லை நிலம்**

இவ்வாறு மலைகளிலும் குகைகளிலும் வாழ்ந்த மனிதன் காடுகளை நோக்கி பயணிக்கலானான.; காடுகள் முற்றிலும் மரங்களாலும் விலங்குகளாலும் மற்றும் இயற்கையோடு ஒன்றித்தே காணப்பட்டது. அதிலிருந்து தோன்றியதே முல்லை நிலம். காடும் காடு சார்ந்த இடம் முல்லை எனப்பட்டது. இங்கு செம்மண் பரந்து இருந்ததால் முல்லை நிலமானது செந்நிலம் எனவும் அழைக்கப்பட்டது. தொல்காப்பியம் முல்லை நிலம் பற்றி “மாயோன் மேய காடுறை உலகம்”; என்று கூறுகிறது.

முல்லை நிலத்திற்குரிய பெரும் பொழுது கார்காலம் எனவும் சிறுபொழுது மாலையாகவும் காணப்பட்டது. இதனை தொல்காப்பியர் தனது தொல்காப்பியத்தில் “காரும் மாலையும் முல்லை”

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

எனக் கூறியுள்ளார். முல்லை நில மக்களின் பிரதான தொழிலாக ஆநிரைஇ மாடு மேய்த்தலஇ; வரகு விதைத்தல்இ உழவுத் தொழில் என்பனவும் காணப்பட்டது. பச்சைப்பயிர் நிறைந்து விளங்கும் முல்லை நிலம், ஆநிரை பெருகுவதற்கும் அத்தொழிலை மேம்படுத்துவதற்கும் மிகவும் ஏதுவான இடமாக காணப்பட்டது. அங்குள்ள பயிர்களையும் மரங்களையும் இலை குலைகளையும் உண்டு இவ்வினம் வளரச்சியுற்றது.5

இவ்வாறு ஆநிரைகள் காட்டிற்கு அனுப்பிவிட்டு அதனை மற்றைய நிலத்து மக்கள் களவினை மேற்கொள்ளாது பாதுகாப்பதற்கும் அடிக்கடி தங்களால் வீட்டுக்கு வர முடியாத காரணத்தினாலும் கூதிர் பாசறைஇ வேனில் பாசறை அமைத்து ஆநிரையை பாதுகாத்துக் கொள்வர். அவ்வாறு செல்லும் தலைவன் நீண்டு நாட்கள் சென்ற பின்னே தன் வீட்டிற்கு வருவான.; இப்பிரிவினை ஏற்றுக் கொண்டு தலைவனுக்காக தலைவி வீட்டில் காத்துக் கொண்டிருப்பாள். அவன் வரும் அந்த இடைக்காலத்தில் தலைவனுக்கும் தனக்கும் இடையே முன்பு நடந்தது எண்ணி மனதால் துயரப்படுவாள் அத்தோடு தலைவனது வருகைக்காக ஏங்கி நிறபாள். பின்னர் தலைவன் திரும்பி வருவதைக் கூறி கார் பருவம் வந்ததும் அவன் வராதது எண்ணி தோழியிடம்; கவலைப்படுவாள்.

இவ்வாறு முல்லை நிலம் சிறப்பிக்கப்படுகின்றுத.அத்தோடு எட்டுத்தொகை இலக்கியங்களில் நற்றிணை 30 பாடல்களும் குறுந்தொகை 45 பாடல்களும் ஐங்குறுநூலில் நூறு பாடல்களும் கலித்தொகையில் 40 பாடல்களும் அகநானூறு 40 பாடல்களும் முல்லைப் பாடல்கள் ஆகும். பத்துப்பாட்டில் நெடுநல்வாடை முல்லைப்பாட்டு ஆகிய இரண்டு பாடல்களிலும் முல்லைத்திணை பாடல்களாக பாடப்பட்டுள்ளன 234 முல்லை நில பாடல்களும் 188 நெடுநல்வாடை பாடல்களும் காணப்படுகின்றது.5

**மருத நிலம்**

வயலும் வயல் சார்ந்த இடம் மருத நிலமாகும். இப்பகுதி ஆறுஇ ஏரி குளங்களைச் சார்ந்திருந்தது. முல்லை நிலத்தின் காட்டை அடுத்துள்ள சமதளமும் ஆற்றங்கரைக்கு அருகில் அழகாகவும் அற்புதமான பூமியை மருதம் என்று அழைத்தனர.; இங்கு மக்களின் பிரதான தொழிலாக நெல் பயிர்ச் செய்கை காணப்பட்டது. போதுமான மழைக்காலம் ஏதுவான கோடைக்காலம் சிறந்த நிலப்பரப்பு நீரை தேக்கி வைக்கக்கூடிய நிலம் என்பவற்றை மருத நிலம் கொண்டுள்ளதால் இங்கு சிறப்பான முறையில் விவசாயம் செய்ய ஏதுவாக இருந்தது. முற்றிலும் மருத நிலம், மனித உழைப்பினால் உருவாக்கப்பட்டது எனலாம.; மழைக்கு அதிபதியாக இந்திரக் கடவுளை வணங்கினால் நெல் பயிர்ச்சைகைக்கு தேவைக்கு ஏற்ப மழை கிடைக்கும் என மக்கள் நம்பினர்.இங்கு 18 வகையான தொழில் மக்கள் இருந்ததாக இலக்கிய சான்றுகள் கூறுகின்றன.

நாற்கவிராச நம்பியின் அகப்பொருள் விளக்கம் 'உழவர் உழத்தியர் கடையர் கடைசியர்' (நம்பி. 23)என இருவகை மருதநில மக்களைப் பற்றி எழுதியிருக்கின்றார்.புறப்பொருள் வெண்பாமாலையின் சான்றுப்பாடலும்,"கலைஞர் அன்று அவையவை கழனிக்கு அடைந்தவர் பெயரே என்னத்திவாகர" நிகண்டு கூறுகிறது. மருத நிலம் மிகவும் செக்கச் செழிப்போடு காணப்பட்டது. கட்டிடங்கள், மாளிகைகள்,; அரண்மனைகள், நகைகள் என பெருஞ்செழிப்போடு இருந்தது எனலாம். காரணம் நிலத்தின் தன்மையும் அவர்களது கடின உழைப்புபே எனலாம்.

இவ்வாறு செல்வச் செழிப்போடு இருக்கும் மக்கள் அதிகமான நேரங்களை ஓய்வு நேரங்களாக கழித்தனர். இவர்கள் பகற்பொழுதில் வேலையை செய்து விட்டு இரா பொழுதில் பரத்தயர் வீட்டுக்கு சென்றனர்; இதனால் தலைவன் தலைவிக்கு இடையே ஊடல் வந்தது(சண்டை). பின்னர் ஊடல்; கூடலில் முற்றுப்பெறும். மருதநில மக்களின் வாழ்க்கை பற்றி எடுத்து இயம்ப வந்த இலக்கியம் பள்ளு. இது வேளாண்மை பள்ளர்களின் வாழ்வியல் பற்றி ஆகும். இவ்வுலகுக்கு பல்வேறு வகையான பள்ளு இலக்கியம் எழுந்துள்ளது எனலாம். பள்ளு சிற்றில்கிய வகையைச் சார்ந்தது. விஜயநகர பேரரசின் நாயக்க மன்னர் காலத்தில் இயற்றப்பட்ட பள்ளு அவர்களது வாழ்க்கை நிலை, அக்கால நாட்டு நிலைமை, சாதாரண மக்களின் நாட்டு நிலைமை, பண்பாட்டுக் கலாச்சார தகவல்கள் என பலவற்றையும் சிற்றிலக்கியம் சித்தரிக்கின்றது. அந்த வகையில் பின்வரும் இலக்கியங்கள் தலைவன் தலைவி காதலையும் பள்ளு என்ற இலக்கியம் மூலம் சித்தரிக்கப்பட்டுள்ளது என்பதை அவதானிக்கலாம். இவ்வாறு ஊடல் கொண்டு பின்னர் கூடலில் முற்றுப்பெறுவதை காணலாம். மேலும் பல வகையான பள்ளு இலக்கியங்களை காணலாம். பின்வருமாறு அகத்தியர் பள்ளு, சிவசயிலப் பள்ளு ,சிவசைல பள்ளு, சீர்காழிப் பள்ளு, செண்பகராமன் பள்ளு, சேரூர் ஜமீன் பள்ளு, ஞானப் பள்ளு, தஞ்சைப் பள்ளு, தண்டிகைக் கனகராயன் பள்ளு, திருச்செந்தில்பள்ளு, திருமலைமுருகன்பள்ளு, திருமலைப் பள்ளு, திருவாரூர்ப் பள்ளு, திருவிடைமருதூர்ப் பள்ளு, தென்காசைப்பள்ளு, பள்ளுப் பிரபந்தம்பறாளை விநாயகர் பள்ளு, புதுவைப் பள்ளு, பொய்கைப் பள்ளு, மாந்தைப் பள்ளு, முக்கூடற் பள்ளு, முருகன் பள்ளு, சண்பகராமன் பள்ளு, இரும்புல்லிப் பள்ளு, கங்காநாயக்கர் பள்ளு, கட்டி மகிபன்பள்ளு, கண்ணுடையம்மன் பள்ளு, கதிரை மலைப்பள்ளு, குருகூர்ப்பள்ளு கொடுமாளூர்ப் பள்ளு ,கோட்டூர் பள்ளு.

**நெய்தல் நிலம்**

கடலும் கடல் சார்ந்த இடம் நெய்தல் நிலம் என அழைக்கப்பட்டது. இவ்நிலம் பெரும் மண்ணினால் ஆக்கப்பட்டது எனலாம். இங்கு வருண பகவானை தங்களது குலதெய்வமாக வழிபடுகின்றனர.; இதனால் தொல்காப்பியர் "வருணன் மேய பெருமணல் உலகம்" என கூறுகின்றார். நெய்தலுக்கு ஆண்டு முழுவதும் உரிய காலம் ஆகும். ஆறு பெரும் பொழுதும்

இளவேனிக்காலமஇ; முதுவேனிக்காலமஇ; காரஇ; குளிரஇ; முன்பனிஇ பின்பனிக்காலம் எனவும் சிறுபொழுது அதனை ஏற்பாடு என்றும் அழைக்கின்றனர். அதாவது சூரியன் மறையும் நேரம் அல்லது ஒழி மறையும் நேரம் ஏற்பாடு என அழைக்கப்பட்டது. ஆகவே பெரும் பொழுது ஆறு சாமங்களாகவும் சிறுபொழுது ஒரு சாமம் ஆகவும் கருதப்பட்டது. இந்த நெய்தல் நிலமானது கடலினால் ஆக்கப்பட்டு காணப்படுகிறது. நீல நிற படகினை தன் மீது சுமந்து கொண்டு மீன்களின் சங்கீதங்களை தங்களது பேச்சாகக் கொண்டிருக்கும் அந்த கடல் சமவெளியின் அழகைப் பாட குறுந்தொகைஇ ஐங்குறுநூறுஇ நற்றிணைஇ அகநானூறுஇ கலித்தொகை ஆகிய அக நூல்களில் நெய்தல் நிலத்தின் சான்றுகளைப் பற்றி நாம் அறியலாம.; நிலத்தைப் பெண்ணாகப் (நில மடந்தை) புலவர் உருவகம் செய்கிறார். அவள் மூங்கில் ஆகிய தோள்களை உடையவள். மலையில் இருந்து வீழும் அருவியே அவள் மார்பகத்தின் மேல் கிடக்கும் முத்துமாலை. அருவி, மலையைவிட்டு இறங்கி அருகில் உள்ள காட்டிற்குள் நுழைகிறது. பிறகு காட்டாறாக மாறுகின்றது.

ஐங்குறுநூறில் 100 நெய்தல் பாடல்களை பாடியவர் அம்முவனார் எனப்படுபவர் ஆவார். கலித்தொகையில் நல்லந்துவனார் மொத்தம் 33 பாடல்கள் நெய்தல் நிலம் பற்றி பாடியுள்ளார் எனலாம். இங்கு தலைவியின் காதல் இரங்கல் நிலையைக் கொண்டது எனலாம். அதாவது நெய்தல் நிலத் தலைவன் மீன்பிடிக்க அதிகாலையில் கடலுக்குச் செல்வான் அவன் வீடு திரும்பும் வரை வாசலிலும் கடலிலும் அருகில் இரங்கி நிற்பாள.; பிறரின் இன்பத்தை கண்டதும் தான் தலைவனுடன் இன்பமாக இருக்க முடியவில்லை என்ற மயக்கம் ஒருபுறமும் கணவன் சென்று வீடு திரும்பாதால் அவன் மாண்டானோ அல்லது புயலில் சிக்குண்டானோ என்ற துக்கம் ஒருபுறமும் தலைவி இரங்கி நிற்பாள். இவ்வாறு தலைவி தன்னுடைய இரங்கலைஇஆற்றாமையைஇ தலைவனை காணாத தான் துன்புறும் நிகழ்வினை எடுத்துக் கூற வந்த புலவர் பின்வருமாறு விரிவுபடுத்தி உள்ளார்.வரைவு கடாவுதல் (மணம் செய்து கொள்ளுமாறு வேண்டுதல்), வரைவு நீடித்தல், பகற்குறி, இரவுக்குறி போன்ற அகவாழ்க்கை நிகழ்வுகள் குறிஞ்சியில் உள்ளது போல் நெய்தலிலும் உண்டு. அகநிகழ்வு அல்லாத, நெய்தலுக்கே சிறப்பாக உரிய சில நிகழ்வுகளையும் காண முடிகின்றது. அவற்றுள் சிற்றில் கட்டி விளையாடல், கூடல்இ இழைத்தல், மீன் உணக்கல், மீன்கறி ஆக்கல், இயற்கையையும் உறவாக நினைத்தல், மடலேறுதல் போன்றவை குறிக்கத்தக்கன. இவை அகவாழ்க்கை நிகழ்வுகளோடு இணைத்துச் சொல்லப்படுகின்றன.7

**பாலை நிலம்**

மணலும் மணல் சார்ந்த இடம் பாலை நிலம் என அழைக்கப்பட்டது. பாலை நிலம் ஓர் வறண்ட பிரதேசமாகும். நீர் உருவாகுவதற்கும் அதனை தேக்கி வைப்பதற்கு பாலை நிலம் ஒரு உகந்த இடம் அன்று. வெப்பமே இங்கு அதிகமாக காணப்படும.; பாலை நில தலைவர் காளைஇ விடலை

என்று அழைக்கப்படுபவர். இங்கு வாழும் மக்கள் மறவர் மற்றும் இளைஞர் என்று அழைக்கப்பட்டனர.; இதனை சிலப்பதிகாரம் பின்வருமாறு சித்தரிக்கின்றது.

"முல்லையும் குறிஞ்சியும் நடுங்குது துயர் உறுத்தும்

பாலை என்பதோர் வடிவம் கொள்ளும் என்கிறது"

இதனால் இந் நிலத்தைக் கொண்டு எந்த தொழிலும் செய்ய முடியாத சூழலில் ஆறலைத்தல் வழிப்பறி எனும் களவினை தமது பிரதான தொழிலாகக் கொண்டனர.; தம் தலைவியர்களைப் பிரிந்து செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டதனால் பிரிதல் பாலை நிலத்தின் சிறப்பு ஒழுக்கம் ஆயிற்று. சிலவேளை தலைவன் தலைவியாகிய இருவரும் ஒருவரை ஒருவர் பிரிந்து செல்ல முடியாத அன்பு பிணைப்போடுடையவர்களாயின் அங்கு இருவரும் ஒன்றாக பாலை நிலத்தை விட்டு பிரிந்து செல்வதுண்டு. இதனை உடன் போக்கு பாலை என்றும் அழைப்பர். இந் நிலத் தெய்வம் கொற்றவை ஆகும். இந்நிலப் பறவைகள் பருந்து, கழுகு, மற்றும், புறா. உழிஞ, பாலை, இருப்பை ஆகியவை பாலை நில மரங்கள் ஆகும். மராம்பு, பாலை நில மலராகும். மான், செந்நாய் இந்நிலத்தின் விலங்குகள். பருந்து, காக்கை, புறா, ஆகியவை இந்நிலத்தின் பறவைகள். இந்நிலத்தின் நீர்நிலை, சுனை, கான்யாறு ஆகும். முழவு, கறங்கு, யாழ், சில்லரி, கிணை, துடி ஆகியவை பாலை நிலத்தின் இசைக்கருவிகள் ஆகும்.14

**பதினெண்மேற்கணக்கு இலக்கியங்கள்.(சங்க கால இலக்கியங்கள்)**

கிறிஸ்துவுக்குப் பின் முதல் 300 ஆண்டுகளில் தோன்றிய சங்க இலக்கியம் அதற்குப் பின் வந்தவர்கள் தேடிப் பெற்றுத் தொகுத்து எட்டுத்தொகை பத்துப்பாட்டு எனும் பதினெண்மேற்கணக்கு இலக்கியங்களை தொகுத்துள்ளனர். மேற்கணக்கு என்பது அடி நிமிர்த்த செய்யுட்கள் ஆகிய அகவல்இ வஞ்சி எனும் யாப்புக்களால் பாடப்பட்டு அகம்இ புறம் என்னும் பொருள் பற்றி பாடப்படும் 18 இலக்கியங்கள் என குறிப்பிடத்தக்கது. எட்டுத்தொகை பல்வேறு புலவர்கள் பல்வேறு இடங்களில் இருந்து பாடிய பாடல்களைத் தொகுத்து பின் உள்ளவர்கள் பொருள் யாப்பு அடியளவு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தொகுத்த இலக்கிய நூல்களே எட்டுத்தொகை ஆகும்.

" நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு ஒத்த பதிற்றுப்பத்து ஒன்று பரிபாடல்
கற்றறிந்தார் ஏற்றும் கழியோடு அகம்பு புறம் என்னும் இத்திறந்த எட்டுத்தொகை"

என்ற வரைவிலக்கணங்களுக்கு இணங்க நற்றுணைஇ குறுந்தொகைஇ அகநானூறுஇ ஐங்குறுநூறுஇ கலித்தொகைஇ புறநானூறுஇ பதிற்றுப்பத்துஇ பரிபாடல் என்பனவாகும்.

பத்துப்பாட்டு என்பது 10 புலவர்கள் பாடப்பட்டது என்பது ஆகும.; "இரண்டு முல்லை பெருகுவள

மதுரைக்காஞ்சி மருவினிய கோல நெடுநல்வாடை கோள் குறிஞ்சி பட்டினப்பாலை கடா தொடும் பத்து"குறிஞ்சிப்பாட்டுஇ முல்லைப்பாட்டுஇ பட்டினப்பாலைஇ திருமுருகாற்றுப்படைஇ பொருனராற்றுப்படைஇ பெரும்பாணாற்றுப்படைஇ சிறுபாணாற்றுப்படைஇ கூத்தராற்றுப்படைஇ மதுரைக்காஞ்சிஇ நெடுநெல்வாடை என்பன பத்துப்பாட்டு நூல்களாகும். இவை அனைத்தும் எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்கள் என குறிப்பிடத்தக்கது.

**சங்க காலப் அகப்பொருள் மரபு**

குறிஞ்சி –புணர்தல்

முல்லை - இருத்தல்

மருதம் - ஊடல்

நெய்தல் - இரங்கல்

பாலை – பிரிதல்

இவ்வன்பின் ஐந்திணைக்கு அப்பால் கைகளை இரண்டு ஒழுக்கங்கள் உள்ளது. கைகளை என்பது ஒரு தலைக்காமம.; இது தலைவன் தலைவியராகிய இருவரும் யாரேனும் ஒருவரது மனதில் தோன்றி மறையும் காதல் கைக்கிளையாகும். இது மூன்று வகைப்படும். பக்குவம் அடைந்த தலைவன் பருவம் அடையாத பேதை பெண் ஒருத்தியைக் கண்டு அவருக்கும் தனக்கும் இடையில் காதல் என்று பலவாறு சொல்லி இன்புறுதல் கைக்கிளையாகும.; இது அடங்காக் காதலின் வெளிப்பாடு எனவே சொல்லலாம்.ஒத்த வயதினர் ஆகிய தலைவனும் தலைவியும் விதிவசத்தால் ஒருவரை ஒருவர் சந்திக்கின்ற பொழுது பெரும்பாலும் தலைவனுடைய உள்ளத்தில் தோன்றி மறைகின்ற காட்சி ஐயம் தெளிவு தேறல் எனும் செய்திகளை கைக்கிளையின் பால்படும்.கொல்லேறு தழுவுதல் முதலான மணமுறைகள் சங்க காலத்தில் சுயம்வரத்தின் மூலம் தலைவன் தெரிவு செய்யப்படுவதனால் கொல்லுகின்ற தன்மை வாய்ந்த காளை மாட்டினை யார் அடக்குகின்றானோ அவனுக்கு பெண் கொடுக்கும் வழக்கம் இருந்தது. ஆனால் ஒரு பெண் மீது பலர் ஆசை கொண்டிருந்தாலும் காளை மாட்டை அடக்கியவனைத் தவிர மற்றவர்கள் அதன் நிலை ஒரு தலை காதலாகிய கைக்களையின் பால்படும்.

பெருந்தினை என்பது பொருந்தாக் காமம். ஒருவன் ஒருத்தியிடம் மிக்க காமதவனாகி அவளை அடைய பெறாமல் மடலேறுதல் வரைபாயுதல் என்னும் இரண்டு அடிப்படையில் உயிரினை மாயிப்பது பெருந்திணையாகும.;

**சங்க காலப் புறப்பொருள் மரபு**

புறத்திணை என்பது பெயர் சுட்டிய பாடல்களின் தொகுதியாகும். இது அரசனது வீரம்இ வெற்றிஇ கொடைஇ ஆட்சி சிறப்புஇ புகழ் என்பவற்றையும் மக்களது வாழ்க்கைஇ நாட்டினது அரசியல்இ பொருளாதார நிலைமைஇ சமூக நிலைமைஇ மக்களது சமயநிலைமைஇ நிலையாமை

வாழ்க்கையின் நோக்கங்களஇ; தத்துவங்களஇ; அரசனுக்கு புலவர் கூறுகின்ற அறிவுரைகள் மற்றும் பெயர் சுட்டிய காதல் பாடல்கள் புறப்பொருள் மரபினுள் அடங்கும். புறத்திணை இலக்கியங்களை பொறுத்தவரையில் ஐவகை நிலங்களுக்கும் ஐவகை போர் ஒழுக்கங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இந்தப் போர் ஒழுக்கங்கள் கூட இயற்கையோடு இணைந்தது. அகத்திணையில் ஐவகை நிலங்களுக்கும் ஐவகை தாவரங்களின் பெயர்கள் வைக்கப்பட்டதுஇ போல் புறத்திணையில் ஐவகை நிலங்களும் ஐவகை பூக்களின் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

குறிஞ்சி –வெட்சி

முல்லை - வஞ்சி

மருதம் - உழிஞை

நெய்தல் - தும்பை

பாலை - வாகை

எனவும் அழைக்கப்பட்டது. இந்த ஐவகைப்போர் ஒழுக்கங்களுக்கு அப்பால் காஞ்சித் திணை பாடாண் திணை என்ற இருவகையான புற ஒழுக்கங்கள் என ஏழாக பிரிக்கப்பட்டுள்ளது. குறிஞ்சி நிலத்தை தலைவர்கள் பிற நிலத்து மந்தைகளை களவில் கொண்டு போதல் காரணமாக ஏற்படும் பூசல் வெட்சி எனப்படும். ஆணிரை கவர்தல் தொடர்பான இப்போரின் போது குறிஞ்சி நிலத் தலைவர்கள் வெட்சிப் பூவை சூடிச் செல்வதனால் குறிஞ்சியின் புற ஒழுக்கம் வெற்றியின் அடையாளமாக அழைக்கப்பட்டது.முல்லை நில மக்கள் தம் பகைவரை அடக்கும் பொருட்டு தம் நிலத்தின் எல்லைக்குள் சென்று வேனில் பாசறை கூதில் பாசறை என்ற பாசறைகளை அமைத்து நிகழ்த்திய போர் வஞ்சி எனப்பட்டது.மருத நிலத் தலைவர்கள் தமது நிலத்தையும் நிலத்தில் உள்ள செல்வங்களையும் பாதுகாத்தல் பொருட்டு செயற்கையாக அரண் அமைத்து காவல் இருப்பது வழக்கம். இந்த அரணுக்கு அகத்தே இருக்கின்ற படைக்கும் அருணுக்கு புறத்தே அதை முற்றுகையிட விரும்பிய படைக்கும் இடையே நிகழ்ந்த போர் எனப்படும். இங்கு உழிஞை பூவினை சூடி செல்வர்.நெய்தல் நிலத்தில் காலமும் இடமும் குறித்து போர்கள் இடம் பெற்றன. இதனை தும்பை என்பர். நெய்தல் நிலத் தலைவன் தம் புகழினை உலகோர் புகழ்தலை பொருளாகக் கொண்டு பகை அரசர்கள் மேல்செல்ல பகையரசனும் அந்தப் புகழே கருதி ஒரு களத்தில் எதிர்த்து அவன் வலிமையினை அழித்தல் தும்பை எனப்படும.; பாலை நிலத்தில் வாழ்வோர் மறவர்கள். மறவர் என்றால் வீரர்; என்று அர்த்தம.; இவர்கள் போருக்கு செல்லும் போது வாகை பூவினை சூடி செல்வதனால் இவர்களது போர் ஒழுக்கம் வாகை எனப்பட்டது. இந்தப் பாலை நிலத்து மறவர்கள் பிறநிலத்து மீது போர் கொண்டு சென்று தோல்வியை தழுவுவது கிடையாது. இதனால் இவர்கள் சூடிச் சென்ற வாகை வெற்றியின் அடையாளமாக கொள்ளப்படுகிறது. இந்த ஐவகை பிற ஒழுக்கங்களுக்கு அப்பால் காஞ்சித் தினைஇ பாடாண் திணை என்ற இரண்டு பிற ஒழுக்கங்களும் உண்டு. காஞ்சித்தினை என்பது நிலையாமையை

குறிப்பது. யாக்கைஇ வாழ்க்கைஇ இளமைஇ செல்வம் என்பவற்றின் நிலையாமை கூறுவது இதுவாகும.; இது ஆண்பால் காஞ்சிஇ பெண்பால் காஞ்சி என்ற இரண்டு வகைகளை கொண்டுள்ளது.

**உசாத்துணை நூல்கள்**

1. தமிழ் இலக்கிய வரலாறு - பேரா.சி.கி.இலட்சுமணன் - கிருஷ்ணா வெளியீடு - பக்கம் 11

2. தமிழ் இலக்கிய வரலாறு - தெ.பொ.மீகளஞ்சியம் - மணி ஆப்செட் - பக்கம் 21

3. தமிழ் இலக்கிய வரலாறு – கார்த்திகேசு சிவத்தம்பி – பவாய் பிறின்ரேர்ஸ் - பக்கம் - 55

4.https://ta.m.wikipedia.org/wiki/%E0%AE%B5%E0%AF%86%E0%AE%B1%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%BE%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9F%E0%AF%81R+:~:text];uP%

5.https://ta.m.wikipedia.org/wiki/%E0%AE%AE%E0%AF%81%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%B2%E0%AF%88_(%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%A3%E0%AF%88)R+:~:text];uP%E0%AE%AE%E0%AF%81%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%B2%E0%AF%88%20

6.https://ta.m.wikipedia.org/wiki/%E0%AE%AA%E0%AE%B3%E0%AF%8D%E0%AE%B3%E0%AF%81R+:~:text];uP%E0%AE%AA%E0%AE%B3%E0%AF%8D%E0%AE%B3%E0%AF%81%20%E0%AE%8E%E0%AE%A9%E0%AF%81%E0%AE%AE%E0%AF%8D%20%E0%AE

7.https://ta.vikaspedia.in/education/ba4baebbfbb4bcd-ba8bc2bb2bcdb95bb3bcd/%E0%AE%A8%E0%AF%86%E0%AE%AF%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%B2%E0%AF%8D-%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%A3%E0%AF%88%E0%AE%AA%E0%AF%8D-%E0%AE%AA%E0%AE%BE%E0%AE%9F%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D

8.https://www.wikiwand.com/ta/%E0%AE%AA%E0%AE%BE%E0%AE%B2%E0%AF%88_(%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%A3%E0%AF%88)